**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.51/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு. ரஜினி |
| Husband/Father Name | ராஜேந்திரன் |
| Village /Area | சோகனூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 48 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.03.2026.

**(எதிரிகள் 1, 3, 4, 5 ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த தீனா எனது அண்ணன் மகன் ஆவார். அ.த.சா.2 சரளா எனது அண்ணி ஆவார். அ.த.சா.3 வெங்கடேசன் எனது அண்ணன் ஆவார். மேற்படி தீனா இறந்து ஒரு வாரம் கழித்து 18.07.2020ம் தேதி செய்தி தாளில் ஒருவர் இறந்து விட்டதாக பார்த்தேன். இது சம்மந்தமாக அரக்கோணம் நகர காவல் நிலையத்திற்கு நானும் எனது அண்ணியும் சென்று விசாரித்த போது இறந்தவர் அணிந்திருந்த டி சர்ட் மற்றும் சிலுவையுடன் கூடிய ஜபமாலை, சில்வர மோதிரம், இடது கையில் பச்சை குத்தியிருந்த புகைபடம் காண்பித்தார்கள் அதனை பார்த்த பிறகு நானும் எனது அண்ணியும் இறந்தவர் எனது அண்ணன் கோபியின் மகன் தீனா என்று உறுதி செய்தோம். அதன் பிறகு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பார்த்தோம். யாரோ அவர் உடனிருந்த கூட்டாளிகள் அவரை அடித்து கொலை செய்து விட்டதாக கேள்வி பட்டேன். இது குறித்து அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:27:30 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.